## மாஹோ பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 09 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 04 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 11 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மாஹோ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசோட்டம் என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

-----------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் மாதம் தொடர்பாக கிடைக்க வேண்டியிருந்த ரூபா 96,500 இற்கான சபை அமர்வுபடி தொகையினை பெறவேண்டிய வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யாமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் வருமான கடன்பட்டோர் அதே தொகையால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2012 நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மிகை ஒதுக்கம் ரூபா 4,048,653 தொகையினை மீளாய்வாண்டின் போது அகற்றும் போது திரண்ட நிதியக் கணக்கு செலவு வைப்பதற்கு பதிலாக நாட்குறிப்பு இலக்கம் 40 இன் மூலம் மூலதனச் செலவுக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான மூலதனச் செலவுகள் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 160,770 இற்கான கட்டட பரிசோதனை கட்டண வருமானம், ஆண்டிற்கான வருமானத்திற்கு எடுக்காமல் கட்டட பரிசோதனை வைப்புக்களின் கீழ் காட்டப்பட்டு பின்னர் 68 ஆம் இலக்க நாட்குறிப்பன் மூலம் மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2013 பண்டக் கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்ட 04 நூலகங்கள் தொடர்பாக கணிப்பீட்டின் பிரகாரம் நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 3,508,801 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 2,790,126 என குறிப்பிட்டுள்ளமையால் நூலகப் புத்தகங்களின் மீதி ரூபா 718,675 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 எதிர்பாராத பொறுப்புக்கள்

-----------------------------------------

பிரதேச சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு தொகை செலுத்த வேண்டிய ஊழியர்கள் தொடர்பாக சபையினால் ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை முறைப்படி செலுத்தப்படாமையால் மீளாய்வாண்டு இறுதி வரை அந் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 3,805,472 ஆக காணப்பட்டது.

1.3.3 இணக்கஞ் செய்யபடாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக பில் போடப்படல் மற்றும இறுதி மீதியின் கீழ் 09 கணக்கு விடயங்களில் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் நேரொத்த பெறுமதியிடையே ரூபா 43,022,899 இற்கான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------------------------------------------------

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 74,164,328 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 6,768,586 தொகை 3 வருடங்களை விட பழைமையான மீதிகள் ஆகும்.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்தவேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 53,954,999 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 5,321,870 தொகை 01 வருடத்தை பழமையான மீதிகள் ஆகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

----------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 65,863,683 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விரிவாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

2 நிதி மீளாய்வு

----------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,165,912 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,373,055 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 5,538,967

இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது. நிதி விளைவிற்கு ரூபா 26,455,018 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 20,425,531 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 10,195,399 வரை அதிகரித்துள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

--------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு தொடர்பாக சபையின் மொத்த மீண்டுவரும் வருமானங்கள் ரூபா 52,783,668 இல் நூற்றிற்கு 67 ஆகிய ரூபா 35,492,948 தொகை உருவாக்கிய வருமானமல்லாத நீதிமன்றத் தண்டப்பணம், முத்திரை கட்டணம், சம்பள மீளளிப்புக்கள் போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகள் அடங்கியுள்ளது. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 26,455,018 இற்கான மொத்தத் தொகையும் மூலதன உதவி, மாகாண முதலீடு, மகநெகும, வயம்ப புபுதுவ போன்ற மூலங்களில் இருந்து வேறு நிறுவனங்களினால் அதிகார பிரதேச அபிவிருத்தி வேலைகளுக்காக கிடைத்த பணம் ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவாகிய ரூபா 48,617,756 இல் நூற்றிற்கு 66 ஆகிய ரூபா 32,282,330 தனிப்பட்ட சம்பள செலவு ஆக காணப்பட்டதுடன் அவற்றில் நூற்றிற்கு 69 ஆகிய ரூபா 22,170,678 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளுராட்சி ஆணையாளரிடம் கிடைத்து வேறு வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் மூலதன செலவாகிய ரூபா 20,425,531 இல் நூற்றிற்கு 7 ஆகிய ரூபா 1,345,221 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் மீதியின் நூற்றிற்கு 93 ஆகிய ரூபா 19,080,310 தொகை கமநெகும, மகநெகும மாகாண முதலீடு, வயம்ப புபுதுவ போன்ற மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் அடங்கியுள்ளன.

2.3 வருமான நிருவாகம்

--------------------------------

2.3.1 வருமான சேகரித்தல் செயலாற்றுகை

-----------------------------------------------------------

வியாபார அனுமதிப்பத்திரம், வாடகை, குத்தகை போன்ற வருமானங்கள் வெளிக்களத்தில் சேகரிப்பதற்காக சட்ட ஏற்பாடுகள் விதித்தில்லாத போது சபை நிதி சேகரிப்போரினால் ஆண்டு பூராகவும் அவ்வாறான வருமானங்கள் வெளிக்களத்தில் சேகரிக்கப்பட்டிருந்தது.

2.3.2 வீதவரி

-----------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 1,641,903 ஆக காணப்பட்டதுடன் வருடாந்த பில் போடப்பட்டவை ரூபா 1,940,208 ஆகும். 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 32 – 42 வரையான வீதிகளின் பிரகாரம் காலாண்டு அடிப்படையில் நிலுவை பட்டியல் தயாரிக்கபட்டு குறிப்பிட்ட அறிவித்தல் வழங்கிய பின்னர் ஆதனங்களை தடைசெய்து நிலுவை வீதவரியினை அறவீடு செய்திருக்கவில்லை.

2.3.3 வர்த்தக வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திர கட்டணம்

---------------------------------------------------------------------------------------------

சபையின் அதிகார பிரதேசத்தில் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட கைத்தொழிலின் மற்றும் வர்த்தக நிறுவனங்களின் பற்றிய பட்டியல் தயாரிக்கப்பட்டு செயலாளருக்கு சமர்பிக்கப்பட்டிருந்த போதும் சபையினால் விதிக்கப்பட்ட வரியை கைத்தொழிலாளர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களில் இருந்து 7 நாட்களில் செலுத்தும்படி அறிவித்தல் அனுப்பியிருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 செயலாற்றுகை மதிப்பீடு

---------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 19 தொலைபேசி செலுத்துகை டவர்கள் நிறுவப்பட்டிருந்ததுடன் கட்டணம் அறவீடு செய்தல் தொடர்பாக தகவல்கள் சமர்பிக்கபட்டியிருக்கவில்லை. அதே போல் சபை அதிகார பிரதேசத்தில் 1292 விதி விளக்குகள் பொருத்தப்பட்டிருந்ததுடன் உபகரணங்களுக்கான செலவு என மீளாய்வாண்டின் போது ரூபா 788,740 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

3.2 முகாமைத்துவ திறமையின்மை

--------------------------------------------------

சபையினால் 2010 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரையான காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 290 கட்டட அனுமதிப்பத்திரங்களுக்கு மீளாய்வாண்டு இறுதி வரை இணக்கச் சான்றிதழ்கள் பெற்றிருக்கவில்லை. அத்துடன் கட்டட அனுமதிப்பத்திரத்தின் காலத்தை நீடிக்கப்படாமை அல்லது இணக்கச் சான்றிதழ் இன்றி அக்கட்டடங்களை பயன்படுத்தப்படுவதனை எதிர்த்து நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.3 செயற்திட்டங்கள் அமுல் நடத்துதல்

----------------------------------------------------------

சுற்றுலா விவகார அமைச்சின் உதவியின் கீழ் ரூபா 3,664,947 இற்கான கிரயத்தில் 2008 ஆண்டின் போது புதிய பஸ் நிலைய வளவில் மலசலகூட முறைமை ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்டு 04 வருடங்களை விட மிகையான காலம் நீர் மற்றும் மின்சாரம் தொடர்புகள் பெற்றிருக்காமையால் மீளாய்வாண்டு இறுதி வரை அதனை பயன்படுத்தியிருக்கவில்லை. 2013 ஆகஸ்ட் 28 இல் மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் போது கட்டடத்திற்கு சேதம் விளைவிக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டிருந்தது.

3.4 ஒப்பந்த நிருவாகம்

-------------------------------

உள்ளுராட்சி அமைச்சு உதவி(2012) இன் கீழ் ரூபா 16,000,000 இற்கான மதிப்பீட்டுத் தொகைக்கு மாஹோ நகர மண்டபம் நிர்மாண வேலை 2012 செப்டம்பர் 11 திகதி சிவில் இன்ஜினியரின் கண்ஸ்டரக்ஷன் நிறுவனத்துடன் 03 மாதங்களில் பூர்த்தி செய்வதற்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது எனினும் மீளாய்வாண்டு இறுதி வரையும் குறிப்பிட்ட வேலைகளில் நூற்றிற்கு 50 இற்கு அண்மித்த அளவு ஏனும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2012 நவம்பர் மாதம் மீண்டும் ரூபா 3,430,302 இற்கான மேலதிக மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு குறிப்பிட்ட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போதும் அதற்கான மேலதிக உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4 கணக்கு நடவடிக்கை தன்மை மற்றும் நல்லாட்சி

-------------------------------------------------------------------------------

4.1 பாதீட்டு கட்டுப்பாடு

------------------------------

மீளாய்வாண்டிற்கான தொடர்பாக பாதீட்டின் பிரகாரம் செலவு மதிப்பீடு ரூபா 72,547,000 தொகை எனினும் அதன் கீழ் மீண்டுவரும் செலவுகளுக்காக ரூபா 161,000 உம் மற்றும் மூலதன செலவுகளுக்கு ரூபா 6,175,000 ஏற்பாடுகள் மிகைத்தமை காணப்பட்டது.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கணக்கு

(இ) நிதிக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிருவாகம்